# சுவிசேஷ

## சம்பாஷணை.

மாணாக்கன். ஐயா, இயேசுவைப்பற்றி ஒன்றின்பின் ஒன்றாய்ச் சரற்கால ஈசல்கள்போற் பலசந்தேகங்கள் சிறியேன் மனதிற் கிளம்புகின்றன. அவைகளிற் சிலவற்றை நிவிர்த்திபண்ணத் தாங்கள் இணைபுரியக்கூடுமா?

ஆசிரியன். இயேசுகிறிஸ்துவைப்பற்றிச் சம்பாஷிக்க எனக்கு மெத்தப் பிரியம். அவரைப் பற்றிச் சுவிசேஷங்களில் நாம் வாசிக்கிறவைகளனைத்தும் மிக அருமையானவைகளும் விலைபெற்றவைகளுமாக இருக்கின்றன.

மா. தங்களுக்கு அரியனவாகிய சுவிசேஷ சம்பவங்கள் ஒன்றோடொன்று இணங்காமற் பிணங்குகின்றனவே. அப்படியிருக்க அவைகளை நான் நம்புவது எப்படி?

ஆ. ஆமோ! ஒருபானைசோற்றுக்கு ஒருசோறு பதம் பார்ப்பதுபோல, ஒரு உதாரணம் கூறு பார்ப்போம்.

மா. கெட்டி, கூறுகிறேன் கேளுங்கள் ஐயா. யோவான், மகதலேனாமரியாள் இயேசுவின் கல்லறைக்குப் போனாளென்றும்; மத்தேயு, அவளுடன்கூட மரியாளும் போனாளென்றும்; மாற்கு, அவ்விருவருடன் சலோமையும் போனாளென்றும்; லூக்கா, அவ்விருவருடன் யோவன்னாளும் பிறரும் போனார்களென்றும் மாறுபடக் கூறியிருக்கின்றனர். பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்லவேண்டுமே.

ஆ. உன்மனதில் மயக்கம் நிறையாதபடி "சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல்" என்னும் அழகுகளுறக் கூறுவேன், கேள். பொய்யா! பொய் மெய்யை வெல்லுமா? இத்தக்கதை உலகம் எங்கும் எப்படிப்பரம்பினது. இதில் யாதொரு ஒவ்வாமையுமில்லை. மகதலேனாமரியாள் தனித்துக் கல்லறைக்குப் போனாளென்று யோவான் சொல்லவில்லை. அவள் மற்ற ஸ்திரீகளை அவ்விடத்திலேதானே தரித்துநிற்கப்பண்ணி, யோவானை அழைத்துவருகிறதற்கு ஓடிப்போனாள். இதினிமித்தம் அவன் அவளைப்பற்றி எழுதியிருக்கிறான். அவள் யோவானிடத்தில்: "அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை" என்று சொன்னாள். இப்படி "எங்களுக்கு" என்று தன்மைப் பன்மையில் அவள் சொன்னதினால் மற்ற ஸ்திரீகளும் அவளுடனேகூடவந்தார்களென்பது வெளிப்படை. (யோவா. 20. 2.)

மரியாளும் மகதலேனாமரியாளுங்கூடி, வெள்ளிக்கிழமை (மத். 27: 61.) இயேசுவை அடக்கம்பண்ணின கல்லறையைப் பார்க்கப்போனதினாலும், ஞாயிற்றுக்கிழமை இவ்விருவருங் கூடிக்கொண்டு கல்லறைக்கு வந்ததினாலும், மத்தேயு இவ்விரு மரியாள்களையும் பற்றி எழுதியிருக்கிறான். சலோமை என்பவள் சுகந்தவர்க்கங்களைக்கொண்டு பின்னொருதிசையிலிருந்து வேறே சிலருடன் அக்கல்லறைக்கு வந்தாள், வருகையில் அவள் முன்னேறிநடந்து மேற்சொல்லிய இருமரியாள்களுடன் கூடிக்கொண்டு போனாள். ஆகையினால் மாற்கு இம் மூவரையும்பற்றி எழுதினான். யோவன்னாள் என்பவள் சுகந்த வர்க்கங்களைக் கொண்டுவந்த ஸ்திரிகளோடு பின்னே வந்தாலும் அவள் ஏரோதுராசாவின் உத்தியோகஸ்தரில் ஒருவனின் மனைவியானபடியினாலும், சுகந்த வர்க்கங்களைக் கொண்டு வந்ததைப்பற்றி லூக்கா பேசுவதினாலும், அவன் அச் சுவிசேஷத்தை ஒரு ரோமனுக்கு எழுதினபடியினாலும் அவளைப்பற்றி எழுதியிருக்கிறான். இவ்வண்ணம் ஒன்றுடனொன்று பிணங்கியவைகள் இணங்கியவாறு காண்க.

கல்லறைக்கு முந்திவந்த ஸ்திரிகள் அதன் வாசலிலே ஒரு தூதன் உட்கார்ந்திருந்ததைக் கண்டார்கள். அதன் பின் வந்தவர்கள் அதற்குள்ளே பிரவேசித்தபோது, இரண்டு தூதரைக் கண்டார்கள்.

தம்பீ, "கற்க கசடற" என்றபடி மனந்தரித்துச் சற்றுச் சுவிசேஷங் கற்றபின் அவைகளை ஒப்பிட்டுப் பார்ப்பாயானால், உன் மனத்தெழுந்த ஒவ்வாமைகளனைத்தும் "பரிதியைக்கண்ட பனிபோற்" பறந்து போகும். சமாதானப்படுத்தக்கூடிய இந்த வித்தியாசங்கள் யாவும் சத்தியத்தின் திருஷ்டாந்தங்களென்பதை உணர்ந்துகொள்.

மா. ஐயா, தாங்களுரைத்த சமரசம் எனக்கு நன்றாய்ச் சுவைக்கின்றது. அது அம்மட்டில்நிற்க, கிறிஸ்து ஒரு பகலும் இரு இராவும் மாத்திரம் கல்லறையிலிருந்திருக்க, அவர் மூன்று பகலும் மூன்று இராவும் அதற்குள் இருப்பாரென்று எப்படிச்சொல்லலாம்? இச்சிக்கையும் எடுத்துவிடுங்கள்.

ஆ. "கிணற்றுத்தவளைக்கு நாட்டுவழக்கம் தெரியாததுபோல்" உனக்கும் யூதவழக்கம் புலப்படாததினாலன்றோ, இதிற் சிக்குப்பட்டாய். ஒரு இராவும் ஒருபகலுங்கூ

டி ஒரு நாளாகிறதென்றும், ஒருநாளின் சிறியபாகமும் முழு இராப்பகலாகச் சொல்லப்படலாமென்றும், யூதர் பிரமாணம்விதித்திருந்தார்கள். இந்தக் காரியத்தில் அவர்களதை இப்படி விளங்கிக்கொண்டார்கள். இயேசுவின் கல்லறைக்குக் காவற்காரரை வைக்கும்படி கேட்பதற்கு யூதர் தங்கள் ஓய்வுநாளிலே பிலாத்துவிடத்திலே வந்தார்கள். குறிக்கப்பட்ட வேளை கடந்துபோய்விடுமானபடியால் மற்றநாள்மட்டும் அவர்கள் தாமதிக்கக்கூடாது. கிறிஸ்து வெள்ளிக்கிழமை கொஞ்சநேரமாகவும், சனிக்கிழமை முழுவதும், ஞாயிற்றுக்கிழமை கொஞ்சநேரமாகவும் கல்லறைக்குள் இருந்தார்.

மா. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தாரென்பதற்குப் போதிய திருஷ்டாந்தமில்லையே.

ஆ. "எண்ணித்துணிககருமம்". தம்பி, நினைத்தல்லவோ பேசவேண்டும். போதிய திருஷ்டாந்தமில்லையா? இயேசுவானவர் ஆறு வாரங்களிலே பத்துமுறை காணப்படவில்லையா? ஐந்நூறுபேருக்கதிகமானவர்கள் அவரைத் தரிசிக்கவில்லையா? அவிசுவாசியான தோமா அவரைக் கண்டு அவரது திருமேனியிலிருந்த காயங்களைத் தன் விரல்களினாற் தொட்டுப்பார்க்கவில்லையா? சீஷர்கள் அவருடன்கூடிப் புசிக்கவில்லையா? அவரைப்பரிசித்துப் பார்க்கவில்லையா? முழுப்பூசணிக்காயைச் சோற்றிற் புதைப்பார்போல, சத்தியத்தை மறைக்கும் அசடர்களாகிய அவரது விரோதிகள் அவரைக்காணாததினால் வந்த தோஷந்தானென்ன? "வேண்டாப்பெண்டீர் கைபட்டாற்குற்றங் கால்பட்டாற் குற்றம்" என்பதறியாயோ? ஒன்றை நம்ப மனமில்லாத ஒருவன் எந்தச்சாட்சியையும் நம்பான். கிறிஸ்து உயிர்த்தெழுந்ததைக் கண்ணாரக்கண்டாலும் அது நம்பப்படக்கூடாததாக அவனுக்குத் தோன்றும். அவர் உயிர்த்தெழுந்தார் என்பதை யூத ஆசாரியர் அறிந்து, போர்ச்சேவகருக்குக் கைக்கூலியாகப் பணங்கொடுத்து, நித்திரைபண்ணுகையிற் சீஷர் களவாயெடுத்துக்கொண்டு போய்விட்டனரென்று சொல்லும்படி ஏவினர். இப்படியிருக்க மேலுஞ்சாட்சி தேடுவது சூரியப்பிரபையைப்பார்க்கச் சூழ்க்கொளுத்துவதுபோலிருக்கிறது.

மா. ஆனால், அவருடைய சீஷர்களிற் சிலர் நம்பப்பின்னிட்ட இக்காரியத்தை நாம் ஏன் நம்பவேண்டும்?

ஆ. சீஷர்கள் ஆரம்பத்திலே சந்தேகப்பட்டது மெய். ஆனால் அவர் உயிர்த்தெழுந்ததைக் கண்ணாரக்கண்டபோது அவர்கள் பூரணமாக நம்பினார்கள்.

மா. இதன்பின் சீஷர் மீன் பிடிக்கப் போனதில்லையா?

ஆ. கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் எப்போதும் அவர்களுடன்கூட இராதபடியினால், சாப்பாட்டுக்காக ஒரு இராத்திரி அவர்கள் மீன்பிடிக்கப்போனார்கள்.

மா. ஐயா, ஆம்பி பூப்பதுபோலப் பின்னும் விருக்களுண்டாகின்றன. அக்காலத்திலெழுதப்பட்ட எந்த இதிகாசங்களிலாவது ஆச்சரியமான இச்சம்பவத்தைப்பற்றி நாம் ஒன்றும் காணவில்லையே.

ஆ. என்ன இதிகாசங்கள்? அக்காலத்திலே இதிகாசங்களை எழுதுகிறவர்கள் இருக்கவில்லை. இச்சம்பவம் நடந்து அறுபது ஆண்டுகள் கழிந்தபின்னர் ஜோசிவஸ் (Josephus) என்னும் ஒரு யூதன் ஓர் இதிகாசம் எழுதினான். "மனத்தகறுப்பெனின் நல்ல செயினும், அனைத்தவையுந் தீயனவேயாகும்" என்றபடி, மற்றும் அநேக யூதரைப்போல அவனும் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாததினால், அருட்கடலாகிய அவரைப்பற்றி விபரமாய் எழுத அவன் விரும்பவில்லை. அன்றியும் அக்காலத்திலே எருசலேம் அழிக்கப்பட்டபடியால் அவனுக்கு அதுதான் மிக முக்கியசம்பவமாயிருந்தது. என்றாலும் ஜோசிவஸ் எழுதினவைகளெல்லாம் சுவிசேஷ சம்பவங்களை உறுதிப்படுத்தினவன்றி, ஓர் மயிர்த்துணையாயினும் அவைகளை மறுத்தில. அவன் யோவான்ஸ்நானனைப்பற்றி எழுதியிருக்கிறான்; வேதபாரகர் பரிசேயர் ஆதியோரைப் பற்றிச் சுவிசேஷ ஆக்கியோருக்கொப்ப விவரித்திருக்கிறான். ஜோசிவசுடைய காலத்திலே இதிகாசம் எழுதின ரோம இதிகாசர், பூங்காவில் மலிந்திருக்கும் தேனீக்களொப்பக் கிறிஸ்தவர்கள் பொலிந்திருந்தார்களென்றும், அவர்கள் தங்கள் நம்பிக்கையினிமித்தம் துன்பப்படுத்தப்பட்டார்களென்றும், சிலுவையிற் பிராணத்தியாகம்பண்ணின கிறிஸ்து என்னப்பட்ட ஒருவரைத் தங்கள் தேவனாக வணங்கினார்களென்றும் எழுதியிருக்கிறார்கள். இதற்குச் சில வருஷங்களுக்குப் பின் சிலர் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றியும் எழுதினார்கள். இது ஓர் உத்தம புறச்சாட்சி என்பதைத்தெளிந்துகொள்.

மா. யூதரும் பிலாத்துவும் இயேசுகிறிஸ்துவை நம்பாவிட்டால் நாம் எப்படி நம்பலாம்?

ஆ. என்ன! யூதரில் அநேகர் அவரை நம்பினார்கள். ஒருமுறை 500 விசுவாசிகள் ஒருமித்துக் கூடிவந்தார்கள். பின்னும் அநேகர் அவரை நம்பினாலும் உபத்திரவத்திற்குப் பயந்து தங்களை மறைத்துக்கொண்டார்கள். மேலும் கிறிஸ்து தம்மை மேசியாவென்று ஆரம்பத்திலே பிரசித்தப்படுத்தாமல் இருந்தார். அவர் மரித்துச் சில வாரங்களின்பின்னர் அநேகாயிரவர் அவரை நம்பினார்கள். "ஒருவன் வேதவாக்கியங்களுக்குச் செவிகொடாவிட்டால் மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும் நம்பமாட்டான்" என்று கிறிஸ்து தாமே சொல்லியிருக்கிறார்.

மா. இயேசுவை நம்பினவர்கள் கல்வியற்றமூடர்கள்.

ஆ. அவர்களிற் சிலர் உன் பேச்சுப்படிதானிருந்தார்கள். ஆனால், அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு, நீக்கோதேமு, பவுல், அப்பொல்லோ முதலிய மற்றவர்கள் கல்வியிற் சிரேஷ்டராய் விளங்கினார்கள். பெருமையே அவநம்பிக்கையையுண்டாக்கும் இடறு கட்டையாயிருந்தது.

மா. நம்பிக்கையீனமாகிய சிறியகுற்றத்திற்காக நரகத்திற் தள்ளுவேனென்று கிறிஸ்து பயமுறுத்தவில்லையா?

ஆ. இது குற்றங்களுட் தலைமையான குற்றமாகையால் ஓர் சிறிய குற்றமன்று. கிறிஸ்து தம்மை ஏற்றுக்கொள்ளாதவன் தேவனை ஏற்றுக்கொள்ளாதவனாயிருக்கிறானென்று வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். தேவனை ஏற்றுக்கொள்ளாதவன் தான் போகிற இடமெங்கும் நரகதண்டனையை அடைகிறான்.

மா. மற்றவர்கள் கிறிஸ்துவைப்போல அற்புதங்களைச் செய்யவில்லையா? அவைகளுக்கு வித்தியாசமென்ன?

ஆ. அவர்கள் தேவன் தங்களுடனேகூட இருந்தாரென்பதைக்காண்பிக்கச் சில அதிசயமான அற்புதங்களைச் செய்தார்கள். ஆனால் அவர்கள் தங்களைத் தேவனென்றாவது தங்களாலேயன்றி ஒருவனும் இரட்சிக்கப்படமாட்டானென்றாவது போதிக்கவில்லை. அவர்கள் பாவிகளுக்காகத் தங்கள் சீவனைப்பலியாகக்கொடுக்க உலகத்தில் வந்தார்களென்று சொல்லவில்லை. இப்படிக்கிறிஸ்து தம்மைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். அவர் பொய்யனானால் அவர் அற்புதஞ் செய்வதற்குத் தேவன் துணைசெய்யமாட்டார்.

மா. கிறிஸ்து மனுக்குலம் முழுவதையும் இரட்சிக்க வந்தால் அவர் சகல தேசங்களுக்கும் ஏன் போகவில்லை?

ஆ. தேவன் அன்பாக இருக்கிறார் என்னும் முக்கிய சத்தியத்தையும், "அன்பிற்குமுண்டோ அடைக்குந் தாழ்" என்றபடி, அவர் மனுக்குலத்தாருக்கு இரட்சிப்பை உண்டாக்க விரும்புகிறார் என்பதையும், முன்பு சில மனுஷருக்குப்போதிக்கவும், பின்பு சகலமனுஷருக்கும் மீட்பை உண்டாக்குவதற்குப் பாடுபடவும் வந்தார். அவர் தம்மிடத்திலே இந்த உபதேசத்தைக் கற்றுக்கொண்டவர்களுடனே: நீங்கள் சகலதேசங்களுக்கும்போய் இந்த இரட்சிப்பைப்பற்றிக் கூறுங்களென்று சொன்னார். அவர்களும் அதின்படியே சர்வதேசங்களுக்கும் போய் அவர் தங்களுக்குபதேசித்தவைகளை உபதேசித்தார்கள்.

மா. ஆனால், அவர் ஆதிமனுஷனாகிய ஆதாமின்காலத்திலே ஏன் வரவில்லை?

ஆ. மனுஷர் பாவத்திலிருந்து விடுதலையடைகிறதற்குத் தங்கள் பிரயாசம் விருதா என்று பல ஆயிரவருஷ அநுபவத்தால் அறிந்துணர்ந்து, இரட்சகரண்டைக்கு மனதாரத் திரும்பி வருவதற்கு ஏற்ற தருணங்கொடுப்பது அவசியமாயிருந்தது. அக்காலத்திலே எவர்களாவது ஒரு இரட்சகரை விரும்பினார்களானால் அவர்கள் வரவிருந்த இவ்விரட்சகரினாலே இரட்சிக்கப்பட்டிருப்பார்கள்.

மா. கிறிஸ்துவின் சீஷர் இந்துதேசவாசிகளை மனந்திருப்ப ஏன் வரவில்லை?

ஆ. 'தெரியத் தெரியும்" என்றபடி நீ தேற ஆராய்வாயானால், அவர்களுடைய சீஷர்கள் இந்தியாவுக்கு வந்தார்களென்று காண்பாய். அப்போது அநேக இந்துக்கள் அவர்களுடைய உபதேசங்கள் சத்தியமானவைகளென்று நம்பினார்கள். அவர்கள்வழித்தோன்றினவர்கள் இப்போதும் தென்னிந்தியாவிலே வாசம் பண்ணுகிறார்கள். ஆனால் அநேக இந்துக்கள் பெருமையினால் கிறிஸ்துமார்க்கத்தை அங்கீகரிக்க மனமற்றிருந்தார்கள். அந்த உபதேசம் மீண்டும் இப்போது இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. தேவசகாயத்தினாலே அநேகர் அதை ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

மா. கிறிஸ்துவைக்குறித்துச் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனங்கள் அவரை மாத்திரமல்ல மற்றெவரையும் குறி

க்கும். உ—ம். "ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்." இவ்வண்ணம் எத்தனையோ கன்னிகைகள் குமாரரைப் பெற்றிருக்கிறார்களே.

ஆ. அது எல்லாரையும் குறிக்கமாட்டாது. எபிரேய பாஷைக் கருத்தின்படி, கன்னிகை என்பது புருஷனையறியாதவள் என்பதே. இக்கருத்தின்படி மரியாள் என்றும் ஒரேயொரு கன்னிகை மாத்திரம் புருஷனையறியாமல் ஒரு குமாரனைப் பிரசவித்திருக்கிறாள். வேறும் அநேக விசேஷ தீர்க்கதரிசனங்களிருக்கின்றன. கிறிஸ்து பிறக்க முன்பின் 500 வருஷங்களுக்குமுன்னே, அவர் இத்தனை வருஷங்களின் பின் தோற்றுவாரென்றும், மூன்றரை வருடங்களாகப் பிரசங்கித்து அப்பாற் சங்கரிக்கப்படுவாரென்றும், தானியேற் தீர்க்கதரிசனாகமத்திலே உரைக்கப்பட்டிருக்கின்றது. அது மாத்திரமல்ல, அவர் மனுக்குலத்தாரை மீட்பதற்குத் தமது சீவனைக் கொடுப்பாரென்றும் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது.

மா. நல்லது, கிறிஸ்து தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றும் நோக்கமாகக் காரியங்களைச்செய்யவில்லையா? பின்னை, அப்படிப்பட்ட தீர்க்கதரிசனம் அவரைக் குறிக்கிறதென்று எப்படித் திருஷ்டாந்தமாகும். யோவா. 19: 28

ஆ. அவர் அப்படிச் செய்யவில்லை. "வேதவாக்கியம் நிறைவேறும்படி எல்லாம்முடிந்தன என்றறிந்து, தாகமாயிருக்கிறேனென்றார்" என்றிவ்வசனம் வாசிக்கப்படவேண்டும். அவரடைந்த பாடுகள் முன்பின் முடிந்தன. நிறைவேறவேண்டிய தீர்க்கதரிசன சம்பவங்களிற் பல, அவையாவன: அவரை முப்பது வெள்ளிக்காசுக்கு விற்றல், அவருடைய வஸ்திரங்களுக்குச் சீட்டுப்போடுதல் முதலியன. அவிசுவாசிகளினால் நிறைவேற்றப்பட்டன.

மா. இயேசு தேவகுமாரனேயானால், அவர் சிலுவையில் அறையப்பட்டிருந்தவேளையிற் தேவனை நோக்கிக் கூப்பிட அவர் ஏன் அவருக்குதவிசெய்யவில்லை?

ஆ. கிறிஸ்து தம்மைச்சிலுவையினின்று விடுவிக்கும்படி கூப்பிடவில்லை. அவர் தமது மனோபாதியினிமித்தம் அப்படிக் கூப்பிட்டார். அவர் பாடுபடும்படி வந்தார். அவர் பாடுபடாதிருந்தாரானால் நாம் இரட்சிக்கப்படமாட்டோம்.

மா. இயேசு சிலுவையிற் பாடுபட்டதினால் அவர் ஓர் மனுஷனாயிருந்தாரன்றிப் பிறிதொரு தன்மையுமுடைய

வராயிருந்திலரென்று திருஷ்டாந்தப்படவில்லையா?

ஆ. ஓர் அனுத்தினையாயினும் அப்படியில்லை. அவர் தேவனாக இருந்தும் மனுஷசாதியின் பாவத்தினிமித்தம் பாடுபடும்படி வந்தார். அவர் தமது மகிமையைவிட்டு ஒரு மனுஷனைப்போல உணரக்கூடியவராக வந்தார். மனுஷரின் பாவப்பாரம் தாங்குதற்கரிய மனோபாதியை அவருக்குண்டாக்கிறது. தேவன் மனுஷரில் எவ்வளவதிகமாக அன்புகூருகிறார் என்பது இதினால் விளங்குகின்றது. அவர் தேவதன்மையாக இருந்தபடியால் அவருண்டாக்கின பிராயச்சித்தம் மனுஷர் யாவருக்கும் போதியதாகும்.

மா. இயேசு தெய்வீகமுடையவராயிருந்தால் ஏன் மனுஷருக்குப் பயந்து ஒழித்து வனவாசஞ்செய்தார்?

ஆ. அவர் சற்றும் பயப்படவில்லை. அவர் தமது சீஷருக்குப் போதிய அளவுபயிற்றுவதற்குமுன் தாம்சாகாதபடி தம்மைக் கொல்லத் தேடினவர்களுக்கு விலகினார். ஆனால் ஏற்றவேளை வந்தபோது தைரியத்தோடு எருசலேமுக்குப் போய் வெளியரங்கமாய்ப் பிரசங்கித்தார்.

மா. இயேசு யாவரையும் இரட்சிக்கவந்தால் இவ்வளவுகாலமும் சிலர்மாத்திரம் இரட்சிக்கப்பட்டதென்ன?

ஆ. சுவிசேஷ சத்தியம் விசுவாசிகளாற் பரப்பப்படுகிறது. அது அதி விரைவாகப் பரம்புகின்றது. கிறிஸ்தவர்களென்று சொல்லப்படுகிற 41 கோடி சனங்கள் இப்போது உலகத்திலிருக்கிறார்கள். இத்தொகை இந்து தேசக் குடிசனங்களின் இருமடங்கு. எல்லாருங் கிறிஸ்தவர்களாகப்போகிறார்களேயென்று பயப்படவேண்டியிருக்கிறதென ஒரு "இந்து டிராக்ட் ஸொஸைட்டி"யாரின் "டிராக்ட்" அழுகின்றது.

மா. நான் கிறிஸ்துவைநம்பாமற் தேவனை நம்பினால் முத்தியடையமாட்டேனா? "யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி" என்று சிலர் சொல்லுகிறார்களே.

ஆ. ஒருவன் தேவனை உண்மையாய் நம்பியிருந்தானானால் அவன் கிறிஸ்துவினிமித்தம் இரட்சிக்கப்படுவான். ஆனால் எவனாவது கிறிஸ்துவை வேண்டாமென்று தள்ளினால் அவன் தேவனைத் தள்ளுகிறான். ஆகையினால் அவன் எப்படி இரட்சிக்கப்படுவான்.

Strong and Asbury, Printers, Manippay, 1887.
First Edition, 5,000.